



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 320 13.05.2026 WEDNESDAY CHITHIRAI: 30 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 320 13.05.2026 புதன்கிழமை சித்திரை : 30 விலை : ரூ.5/–


## தமிழகம் முழுவதும் 717 டாஸ்மாக் கடைகளை மூட

# "முதல்வர் விஜய் அதிரடி உத்தரவு!"

### முதல்வரின் நேரடி கண்காணிப்பில் போதைப் பொருட்கள் தடுப்பு படை: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை: மே.13-

முதல்வரின் நேரடி கண்காணிப்பில் போதைப் பொருட்கள் தடுப்பு படை அமைக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு அதிகாரப்பூர்வ அரசாணை வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது: சென்னையில் 12 உட்பட மாநிலம் முழுவதும் 65 இடங்களில் போதைப்பொருள் தடுப்புப்படை காவல்நிலையங்கள் அமைக்கப்படும். முதல்வர் விஜயின் நேரடி கண்காணிப்பில் போதைப்பொருள் தடுப்பு படை உருவாக்கப்படும். போதைப்பொருட்கள் தொடர்பான குற்றங்களை கண்டுபிடித்து கடுமையான நடவடிக்கை எடுக்க முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைக்கு மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 37 காவல் நிலையங்கள் அமைக்கப்படும். பெண்களின் பாதுகாப்புக்காக அதிநவீன வசதிகளுடன் கூடிய சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை மாநிலம் முழுவதும் உருவாக்கப்படும். பெண்கள் பாதுகாப்பு தொடர்பான புகார்கள் மீது விரைந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

சென்னை: மே.13-

வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள் அருகிலிருந்து 500 மீட்டர் வரை அமைந்துள்ள 717 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை இரண்டு வாரத்துக்குள் மூடுமாறு தமிழக முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: பொதுமக்கள் நலன் கருதி வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பேருந்து நிலையங்கள் அருகிலிருந்து 500 மீட்டர் வரை அமைந்துள்ள 717 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை இரண்டு வாரத்துக்குள்




மூடுமாறு முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் 4,765 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் தற்போது நடத்தப்பட்டு வருகிறது. அதில், வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பேருந்து நிலையங்கள் அருகிலிருந்து 500 மீட்டர் வரை அமைந்துள்ள கடைகளை ஆய்வு செய்து கண்டறியுமாறு முதலமைச்சர் விஜய் உத்தரவிட்டார்.

மேற்படி ஆணைக் கிணங்க இந்த மூன்று இனங்களில் 717 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் செயல்பட்டு வருவது கண்டறியப்பட்டது.

பொதுமக்கள் நலனைக் கருத்தில்கொண்டு வழிபாட்டுத் தலங்கள் அருகிலுள்ள 276 கடைகள், கல்வி நிறுவனங்கள் அருகிலுள்ள 186 கடைகள் மற்றும் பேருந்து நிலையங்கள் அருகிலுள்ள 255 கடைகள் என மொத்தம் 717 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை அடுத்த இரண்டு வாரத்துக்குள் மூட முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த 2023 ஆம் ஆண்டு தமிழகத்தில் வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள் அருகே செயல்பட்டு வந்த 500 மதுக்கடைகள் தமிழக அரசால் மூடப்பட்டது நினைவுக்கூரத்தக்கது.

# திருப்பூர் கலெக்டர் ஆபீஸில் குடிநீர் இல்லை...

## குடிநீர் இயந்திரம் துருப்பிடிக்கலாம்...

## அரசு இயந்திரம் துருப்பிடிக்கலாமா?

திருப்பூர், மே.13

மாவட்டத்தின் தலையெழுத்தையே மாற்றும் அதிகாரம் படைத்த ஒரு அலுவலகத்தில், ஒரு சொட்டுத் தண்ணீருக்காக மக்கள் தவிப்பது நிர்வாகத் தோல்வியின் உச்சம்.

திருப்பூர் மாவட்டத்தின் அனைத்து அரசு இயந்திரங்களும் செயல்படும் மையப்புள்ளியான மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், கடந்த ஓராண்டுக்கும் மேலாக நிலவி வரும் குடிநீர் தட்டுப்பாடு பொதுமக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.




**இதற்குச் சாட்சியாக,**

அலுவலகத்தின் ஆறு தளங்களிலும் காட்சிப் பொருளாக நிற்கும் 'அக்வா கார்டு' குடிநீர் இயந்திரங்கள் சாட்சியம் சொல்கின்றன. ஆட்சியர் அலுவலகத்தின் ஆறு தளங்களிலும் பொதுமக்களுக்காக வைக்கப்பட்ட 'அக்வா கார்டு' சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரங்கள் அனைத்தும் பழுதடைந்து, பயன்பாடின்றி துருப்பிடித்து வருகின்றன. இது குறித்து அங்கிருக்கும் அதிகாரிகளே, "இவை கடந்த ஓராண்டாகவே வேலை செய்யவில்லை" என்று அலட்சியமாகக் கூறுவது வேதனையின் உச்சம்.

திருப்பூர் மாவட்டத்தின் ஒட்டுமொத்த செயல்பாட்டையும் இயக்கும் 'அரசு இயந்திரமான' மாவட்ட ஆட்சியர் அலுவலகமே, இன்று துருப்பிடித்து முடங்கிக் கிடக்கிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆறு தளங்களிலும் அக்வா கார்டு மிஷின்கள் 'ஷோ பீஸ்' ஆக இருக்கின்றன.

**பூட்டு யாருக்கு?**

இதில் உச்சக்கட்ட வேடிக்கை என்னவென்றால், ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வராத அந்தக் குழாய்களுக்கு மட்டும் 'பூட்டு' போட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. "தண்ணீரே வராத குழாய்க்குப் பூட்டு எதற்கு?" என்று மக்கள் கேட்கும் எள்ளிநகையாடல் அதிகாரிகளின் காதுகளுக்கு எட்டவில்லையா? இயந்திரங்கள் துருப்பிடித்து ஓராண்டாகியும், அதிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வராத நிலையில், அந்தத் தண்ணீர் வராத குழாய்களுக்கு மட்டும் 'பூட்டு' போட்டுப் பாதுகாக்கும் விசித்திரமான நிர்வாகம் இங்கே நடந்து வருகிறது.

**பொதுமக்கள், மாற்றுத்திறனாளிகளின் தாகம்:**

மனு கொடுக்க வரும் மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள் மற்றும் பொதுமக்கள் தாகத்தால் நா வறண்டு தவித்து வருகின்றனர். பத்திரிகையாளர்கள் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டிய பிறகும், மாவட்ட நிர்வாகம் காது கேளாதது போல் இருப்பது பொதுமக்களிடையே கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

அவற்றைச் சீரமைக்க மாவட்ட ஆட்சியர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுதான் சமூகத்தின் 'ஹைலைட்' புகாராக உள்ளது.

**முச்சந்தி அலசல்:**

"சொந்த வீட்டிலேயே விளக்கு எரியாத போது, ஊருக்கு எப்படி ஒளி கொடுப்பார்கள்?" என்பது போல, தனது சொந்த அலுவலகத்திலேயே அடிப்படை வசதியான குடிநீரைச் சீரமைக்க முடியாத மாவட்ட நிர்வாகம், ஒட்டுமொத்த மாவட்ட மக்களுக்கு எவ்வாறான வசதிகளைச் செய்து கொடுக்க முடியும் என்பதே இப்பகுதி மக்களின் தார்மீகக் கேள்வியாக உள்ளது. இதில் மாவட்ட ஆட்சியரே இதுவரை எவ்வித நேரடி நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுதான் இந்த அவலத்தின் உச்சக்கட்டம்.

**ஆட்சியர் மீது அதிருப்தி:**

தற்போதைய மாவட்ட ஆட்சியரின் நிர்வாகம், மக்களின் பிரச்சினைகளை, தன் வாசலிலேயே தாகத்தால் தவிக்கும் மக்களின் துயர் துடைக்காத ஒரு நிர்வாகம், மாவட்டத்தின் பிற அடிப்படைத் தேவைகளை எப்படி நிறைவேற்றும்? குடிநீர் இயந்திரங்கள் துருப்பிடித்தால் மாற்றலாம், ஆனால் நிர்வாகமே துருப்பிடித்தால் அதை மாற்ற வேண்டியது மக்களின் கடமையாகிவிடும் எனச் சமூக ஆர்வலர்கள் கொதிக்கின்றனர்.


**விளம்பரம் மற்றும் செய்திகள்**

**தொடர்புக்கு : 88705 00000**



# தமிழகத்தின் புதிய முதல்வர் விஜய்க்கு வள்ளியூர் வணிகர்கள் வாழ்த்து!

வள்ளியூர், மே.13

வள்ளியூர் வணிகர் நல சங்கத்தின் செயற்குழு கூட்டம் தலைவர் தா.எட்வின் ஜோஸ் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் இள.கவின் வேந்தன், பொருளாளர் சேதுராமலிங்கம் மற்றும் இணை செயலாளர் ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக மலையடிபுதூர் பஞ்சாயத்து தலைவர் வழக்குரைஞர் எஸ்.ரமேஷ் கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில், தமிழகத்தின் புதிய முதல்வராகப் பதவியேற்றுள்ள ஜோசப் விஜய் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகளும் பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டன. தொடர்ந்து நடைபெற்ற ஆலோசனையில், சிறு, குறு வணிகர்களின் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கப் புதிய அரசை வலியுறுத்துவது என்றும், வணிகர்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் கிறிஸ்டோபர் மூலமாக முதல்வர் விஜய்யின் கவனத்திற்குக் கொண்டு செல்லவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், திருவாரூர் மாநாட்டில் கலந்து கொண்ட நிர்வாகிகளுக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டதுடன், களக்காடு தெற்கு மற்றும் திருக்குறுங்குடி பகுதிகளில் புதிய வணிகர் சங்கங்களை உருவாக்கி, அவற்றை மாநிலத் தலைவர் விக்ரமராஜா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லவும் முடிவெடுக்கப்பட்டது. நிகழ்வின் இறுதியில் சோழன் உலக சாதனையாளர் எஸ்.இசக்கிமுத்து நன்றி கூறினார்.

நிகழ்வில் பங்கேற்ற முக்கிய நபர்கள்: தா.எட்வின் ஜோஸ் (தலைவர்), வழக்குரைஞர் எஸ்.ரமேஷ் (சிறப்பு விருந்தினர்).

# இந்து சமய அறநிலையத் துறை குறித்தும் வெள்ளை அறிக்கை வெளியிட தவெக அரசுக்கு இந்து முன்னணி கோரிக்கை



சென்னை: மே.13-

தமிழக முதல்வர் விஜய் அறிவித்துள்ள வெள்ளை அறிக்கையில், இந்து கோயில்கள் பற்றிய வருமானம், சீரமைப்பு மற்றும் அதன் எதிர்காலத் திட்டம் குறித்தும் முழுமையான தகவல்களை வெளியிட வேண்டும் என இந்து முன்னணி வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தில் பொறுப்பு ஏற்றுள்ள முதல்வர் ஜோசப் விஜய், தமிழகத்தின் நிதி நிலை குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடப் போவதாக கூறியுள்ளார். இதனை வரவேற்கிறோம்.அதேசமயம் அனைத்து துறைகளிலும் கடந்த திமுக ஆட்சி செய்தது என்ன? அதில் நடந்த முறைகேடுகள் என்ன? என்பது குறித்து முழுமையான வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்பது தமிழக மக்கள் கோரிக்கையாக சமூக ஊடகங்களில் வெளிவருகிறது.

பொதுப் பணித்துறை, உள்ளாட்சித் துறை என பல துறைகளில் ஊழல் கறைபடிந்த நிர்வாகம் குறித்த கேள்விகள் நீள்கிறது. உதாரணமாக வெளிநாட்டு முதலீடு ஈர்த்த விவகாரம் குறித்த விமர்சனங்கள் திமுக ஆட்சியிலேயே எழுந்தன. இதில் புதிய அரசுக்கு நமது கோரிக்கை, இந்து சமய அறநிலையத் துறை செயல்பாடு குறித்தும் தீவிரமான வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.கடந்த திமுக ஆட்சியில் மூவாயிரம் கோயில்களில் அவசரகதியில் குடமுழுக்கு நடைபெற்றது. பல லட்சம் கோடி நிதி திரட்டப்பட்டது. அதில் பல முறைகேடுகள் குறித்து புகார்களும் வந்தன. உண்டியல் காணிக்கை எண்ணும் பணியில் நடந்த முறைகேடுகளில் இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் ஈடுபட்டது தெரிய வந்தது.கோயில் நிலங்கள் வீடுகள் முறைகேடாக தனியாருக்கு, அரசு துறைகளுக்கு தாரை வார்க்க அரசு அதிகாரிகள் உடந்தையாக செயல்பட்ட வழக்குகள் பதிவாகின. பக்தர்கள் காணிக்கை அளித்த நகைகள் உருக்கப்பட்டதில், கோடிக்கணக்கில் பணம் சுருட்டப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. நீதிமன்றம் பல வழிகாட்டுதல்களைத் தந்தும் கடந்த திமுக அரசு அதனை செயல்படுத்தவில்லை.மேலும் திமுக, அதிமுக ஆட்சியில் தெய்வத் திருமேனிகள், கோயிலின் புனிதமான பொருட்கள், பழமையான விக்ரகங்கள் முதலானவை களவாடப்பட்டு, கடத்தப்பட்ட வழக்குகள் என்னவாயிற்று? இந்த குற்றங்களுக்குத் துணைபோன இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு பிணையில் வெளிவந்தனர். ஆனால் அந்த வழக்குகள் தொடர்ந்து நடத்தாமல், குற்றச்செயலில் ஈடுபட்ட அதிகாரிகள் மீண்டும் பணி அமர்த்தப்பட்டு பதவி உயர்வு வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது. கடத்தப்பட்ட இறைவன் திருமேனிகள் மீட்க போதுமான நடவடிக்கை இல்லை என்று உச்சநீதிமன்றம் தமிழக அரசு மீது அதிருப்தி தெரிவித்தது இன்றைய ஊடகங்களில் வெளிவந்துள்ளது.

எனவே ஊழலில் முறைகேடுகளில் முதலிடத்தில் இருக்கும் இந்து சமய அறநிலையத் துறை கடந்த காலங்களில் செயல்பட்டதை குறித்து முழுமையான வெள்ளை அறிக்கையை புதிய அரசு, தமிழக மக்கள் முன் வைக்க வேண்டும் என்று இந்து முன்னணி சார்பில் கேட்டுக் கொள்கிறோம். இதன் மூலம் கடந்த ஆட்சியில் நடைபெற்றவை மக்களின் பார்வைக்கு வரும். மக்களுக்கு விழிப்புணர்வு வந்தால் அதிகாரிகள் செய்யும் தவறை தட்டிக் கேட்கத் துணிவு வரும்.இனி வரும் காலங்களில் அரசியல்வாதிகளின் ஊழலுக்கு துணை போகாமல், இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் உண்மையாக, நேர்மையாக இறைவனுக்கு பணி செய்ய வேண்டும் என்ற நிலை ஏற்படும். எனவே முதல்வர் ஜோசப் விஜய் தலைமையிலான புதிய அரசு இந்து சமய அறநிலையத் துறையில் நடைபெற்ற அனைத்து வித நடவடிக்கைகள் குறித்தும் முழுமையான வெள்ளை அறிக்கை வெளியிட்டு, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்து முன்னணி சார்பில் கேட்டுக் கொள்கிறோம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது

# “சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என பேரவையில் உதயநிதி பேசியது...” நயினார் நாகேந்திரன் காட்டம்



சென்னை: மே.13-

'துணை முதல்வராக இருந்த நீங்கள், தற்போது எதிர்க்கட்சித் தலைவராக பதவி இறக்கம் செய்யப்பட்டதற்கு சனாதனத்தை ஒழிப்பேன் என்று பேசி, இந்துக்களின் நீங்கா வெறுப்பை சம்பாதித்துக் கொண்டதே காரணம்' என உதயநிதி ஸ்டாலினை தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'இந்து மதத்தின் மீது உங்களுக்குள்ள அதீத வெறுப்பே, உங்கள் சரிவுக்கு வழிவகுக்கும் உதயநிதி ஸ்டாலின். உங்கள் முதல் சட்டப்பேரவை உரையிலேயே கோடிக்கணக்கான இந்துக்களின் நம்பிக்கையான சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என நீங்கள் பேசியிருப்பது, அரசியல் ரீதியாக நீங்கள் இன்னும் பக்குவப்படவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. இந்துக்களின் மீது தொடர்ந்து நீங்கள் கல்லெறிவது கடும் கண்டனத்துக்குரியது.

துணை முதல்வராக இருந்த நீங்கள், தற்போது எதிர்க்கட்சித் தலைவராக பதவி இறக்கம் செய்யப்பட்டதற்கு 'சனாதனத்தை ஒழிப்பேன்' என்று நீங்கள் ஒருமுறை பொதுவெளியில் பேசி, இந்துக்களின் நீங்கா வெறுப்பை சம்பாதித்துக் கொண்டதே காரணம்.

எனவே, நீங்கள் அரசியலில் மென்மேலும் வளர வேண்டுமானால் ஒரு குறிப்பிட்ட மதத்தின் மீது உங்களுக்குள்ள வெறுப்புணர்வை வெட்டி எறிந்துவிட்டு, உண்மையான மதநல்லிணக்கத்தைப் போற்றுவது அவசியம். இந்து, இஸ்லாமியர், கிறிஸ்தவர் என ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் அவரவர் மத அடையாளங்களும் நம்பிக்கைகளும் அதிமுக்கியம் என்பதை நீங்கள் இனியாவது உணர்ந்து கொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு இந்துக்களின் நம்பிக்கைகளைக் கொச்சைப்படுத்தி, "மத" யானையின் மீது அரசியல் சவாரி செய்ய முயன்றால் மீள முடியா பாழுங்குழியில் வீழ்வீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.மேலும், அனைத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி அமைத்திருக்கும் முதல்வர் விஜய், சட்டப்பேரவையில் பகிரப்பட்ட இந்த வெறுப்புப் பிரச்சாரத்துக்கு என்ன எதிர்வினையாற்றப் போகிறார் என்பதைத்தான் தமிழகம் தற்போது ஆவலாக எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது' எனத் தெரிவித்துள்ளார்.

# பொதுமக்களுக்கு இடையூறு செய்தால் நடவடிக்கை: கட்சியினருக்கு தவெக எச்சரிக்கை



சென்னை:மே.13-

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் தவெகவினர் யாரும் பேனர்கள், பதாகைகள் உள்ளிட்டவற்றைக் கண்டிப்பாக வைக்கக் கூடாது என்றும், கொண்டாட்டங்களில் ஈடுபடக் கூடாது என்றும், மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அக்கட்சி அறிவித்துள்ளது. இது தொடர்பாக தவெக பொதுச் செயலாளர் என்.ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டு மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப்பட்டதுதான் தமிழக வெற்றிக் கழகம். தமிழ்நாட்டு மக்களின் ஏகோபித்த நம்பிக்கையைப் பெற்ற, தமிழ்ச் சொந்தங்களின் குடும்பத்தில் ஒருவராக இருக்கக்கூடிய தமிழ்நாடு முதல்வர் மிகப் பெரிய பொறுப்பை நமக்குக் கொடுத்திருக்கிறார் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். அதை நோக்கியே நாம் பயணிக்க வேண்டும். எனவே, தவெகவினர் யாரும் பிறந்தநாள் விழா மற்றும் குடும்ப விழாக்கள் தொடர்பாகப் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலைகளிலோ, மக்கள் அதிகம் கூடும் பொது இடங்களிலோ அல்லது போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலோ எங்கும் பேனர்கள், பதாகைகள் உள்ளிட்டவற்றைக் கண்டிப்பாக வைக்கக் கூடாது. பொதுமக்களுக்கு இடையூறாக எவ்விதக் கொண்டாட்டங்களிலும் யாரும் கண்டிப்பாக ஈடுபடக் கூடாது.பேனர்கள், கொண்டாட்டங்கள் உள்ளிட்ட எவற்றின் வாயிலாகவும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் யாரேனும் நடந்துகொண்டால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தவெக தலைவரின் ஒப்புதலோடு தெரிவித்துக் கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.



# முருகானந்தம், உதயச்சந்திரன் உள்ளிட்ட ஐஏஎஸ் அதிகாரிகள் மாற்றம்

சென்னை:மே.13-

தலைமைச் செயலராக இருந்த முருகானந்தம், நிதித்துறைச் செயலராக இருந்த உதயச்சந்திரன் உள்ளிட்ட ஐஏஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள உத்தரவில், விடுப்பிலிருந்து திரும்பியுள்ள என்.முருகானந்தம், தலைமைச் செயலர் பொறுப்பில் இருந்து வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையராக நியமிக்கப்படுகிறார். இந்த பொறுப்புகளை கூடுதலாக வகித்து வந்த அமுதாவுக்குப் பதிலாக இவர் நியமிக்கப்படுகிறார்.

இதேபோல், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக பதவி வகித்து வந்த எம்.ஏ.சித்திக், நிதித்துறை செயலராக நியமிக்கப்படுகிறார். இந்த பொறுப்புகளை வகித்து வந்த டி.உதயச்சந்திரனுக்குப் பதிலாக இவருக்கு இந்த பொறுப்பு அளிக்கப்படுகிறது. மாநில திட்ட இயக்குநர், ராஷ்டிரிய உச்சதார் சிக்ஷா அபியான் (ஸிஹிஷிகி) ஆகிய பொறுப்புகளை வகித்து வந்த முதன்மைச் செயலர் டாக்டர் எஸ்.ஸ்வர்ணா, டாக்டர் கே.மணிவாசன் கூடுதலாக வகித்து வந்த சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறைக்கான அரசு முதன்மைச் செயலராக நியமிக்கப்படுகிறார். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளராகப் பணியாற்றி வரும் கே.நந்தகுமார், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (ஜிகிஷிவிகிசி) நிர்வாக இயக்குநராக நியமிக்கப்படுகிறார். டி.கிறிஸ்துராஜ் வகித்து வந்த இந்த பொறுப்புகள் இவருக்கு மாற்றப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லஞ்சம் வாங்கியதாக பொறியாளர் கைது



சிவகங்கை: மே.13-

சிவகங்கையில் ரூ.1 லட்சம் லஞ்சம் வாங்கிய நெடுஞ்சாலைத் துறை உதவி செயற்பொறியாளர் கைது செய்யப்பட்டார்.சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் அருகே கிளுவச்சியைச் சேர்ந்தவர் கந்தசாமி. முதல் நிலை ஒப்பந்ததாரரான இவர், நெடுஞ்சாலைத் துறையில் ரூ.2.15 கோடி மதிப்பிலான 3 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தம் எடுத்தார். பணி முடிந்த நிலையில், ரூ.18.47 லட்சம் விடுவிக்கப்படாமல் இருந்தது.இதற்காக, அவர் நெடுஞ்சாலைத் துறை உதவி செயற்பொறியாளர் சையது இப்ராஹிமை அணுகினார். அவர் ரூ.1 லட்சம் லஞ்சம் கேட்டார். லஞ்சம் கொடுக்க விரும்பாத கந்தசாமி, லஞ்ச ஒழிப்பு போலீஸாரிடம் புகார் தெரிவித்தார். போலீஸாரின் அறிவுறுத்தல்படி, ரசாயனப் பணம் கொடுக்கப்பட்டது. இதை பெற்றபோது சையது இப்ராஹிமை லஞ்ச ஒழிப்பு போலீஸார் கைது செய்தனர்

# வங்கக் கடலில் உருவானது புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி: 10 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு



சென்னை:.மே.13-

தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவானது. இதனால் 15, 16ம் தேதிகளில் 10 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வடக்கு இலங்கை கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் வலுப்பெறக் கூடும். சுமார் 1.5 கி.மீ. உயரத்திலிருந்து 4.5 கி.மீ உயரம் வரை காற்றழுத்த தாழ்வுப் பகுதியின் மையப் பகுதிகளிலிருந்து தெற்கு லட்சத்தீவு பகுதிகள் வரை, தென் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது.இதன் காரணமாக இன்று (மே 12) தென் தமிழகம் மற்றும் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும், 13, 14ம் தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்யக்கூடும்.15, 16ம் தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 17ம் தேதி தென் தமிழகம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்யக்கூடும்.15, 16ம் தேதிகளில் நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# பரந்தூர் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும்: புதிய அரசுக்கு போராட்ட குழு கோரிக்கை




காஞ்சிபுரம்:மே.13-

தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றி, பரந்தூர் விமான நிலையத் திட்டத்தில் ஒரு பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது. எப்போது தங்கள் நிலம், வீடுகள் பிடுங்கப்படுமோ என்று பெரும் அச்சத்தில் இருந்த பொதுமக்கள், தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு நிம்மதிப் பெருமூச்சு விட்டாலும், இந்தத் திட்டத்தை நிறுத்தி வைக்காமல் முழுமையாக ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூர் மற்றும் சுற்றியுள்ள 13 கிராமங்களைச் சேர்த்து 4,791 ஏக்கர் பரப்பளவில் பசுமை வழி விமான நிலையம் அமைக்கப்படும் என்று மத்திய, மாநில அரசுகள் அறிவித்தன.இந்தத் திட்டத்தால் 13 கிராமங்களில் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டாலும், ஏகனாபுரம் உள்ளிட்ட கிராமங்கள் முற்றிலும் அழியும் நிலை உருவானதால் போராட்டம் தீவிரமானது. சுமார் இரண்டு ஆண்டுகளாக இந்தப் பகுதி மக்கள் இத்திட்டத்துக்கு எதிராகப் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்தனர்.இதற்கிடையில், இந்தப் பகுதியில் பரந்தூர் விமான நிலையம் அறிவிக்கப்பட்டதும் ரியல் எஸ்டேட் வர்த்தகம் அசுர வளர்ச்சி கண்டது. நிலங்களின் மதிப்பு 10 மடங்கு வரை உயர்ந்தது.பல ரியல் எஸ்டேட் உரிமையாளர்களும், பணக்காரர்களும் நிலங்களை வாங்கி குவித்தனர். தற்போது இத்திட்டத்தை தீவிரமாக எதிர்த்து வந்த த.வெ.க தலைவர் விஜய் வெற்றி பெற்று முதல்வரானதால், இந்தத் திட்டம் ரத்து செய்யப்படலாம் என்ற அச்சம் (முதலீட்டாளர்கள் மத்தியில்) உருவாகியுள்ளது.இந்த விமான நிலையம் அறிவிக்கப்பட்டது முதல், ஆரம்பத்தில் இருந்தே இத்திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் விஜய், விக்கிரவாண்டியில் நடைபெற்ற தங்கள் கட்சி மாநாட்டில் இத்திட்டத்தை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியதோடு, விவசாயிகளுக்கு ஆதரவாக தனது முதல் போராட்டத்தை பரந்தூர் அருகிலேயே நடத்தினார். இதனால் இந்தத் திட்டம் இனி வேகம் எடுக்குமா? அல்லது கிடப்பில் போடப்படுமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது. இது குறித்து போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் ஆர்.எஸ்.இளங்கோ கூறும்போது, "விமான நிலைய ஓடுதளம் அமையவுள்ள பகுதி நீர்நிலைகளை உள்ளடக்கியது.த.வெ.க தலைவர் விஜய் முதல்வராகியுள்ளதால் இத்திட்டத்தை எளிதாக ரத்து செய்ய முடியும். இந்தத் திட்டத்தை நிறுத்தி வைப்பது போன்ற நடவடிக்கையை எடுக்காமல் முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்றே நாங்கள் விரும்புகிறோம். விவசாயிகளுக்கு பாதிப்பில்லாத வேறு மாற்று இடங்களில் இந்தத் திட்டத்தை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கலாம். பரந்தூர் பகுதியில் விமான நிலையம் அமைந்தால், இங்கு நீர்நிலைகளில் தேங்க வேண்டிய உபரிநீர் அனைத்தும் சென்னைக்குள்தான் செல்லும். எனவே, இத்திட்டத்தை ரத்து செய்வது சென்னை மக்களுக்கும், விஜய்க்கு முழுமையாக ஆதரவளித்த சென்னை வாக்காளர்களுக்கும் கூட மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும்" என்றார்.

# அரசுப் பள்ளிகளில் ஆசிரியர் காலியிடங்கள் எத்தனை? பள்ளிக்கல்வித் துறை கணக்கெடுப்பு

சென்னை:மே.13-

அரசுப் பள்ளிகளில் காலியாகவுள்ள இடைநிலை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களின் விவரங்களை அனுப்பக் கோரி பள்ளிக்கல்வித் துறை உத்தரவு பிறப்பித்துள்ளது.இதுதொடர்பாக பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் பிரிவு) அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கை: அரசு, நகராட்சி, உயர் நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் 31.5.2025 நிலவரப்படி, அனைத்துப் பாட பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் இடைநிலை ஆசிரியர்களின் நிரப்பத் தகுந்த காலிப்பணியிடங்



களை மே 20க்குள் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும்.அவ்வாறு காலிப் பணியிட விவரங்களை அனுப்பும்போது 01.08.2025ல் ஆசிரியர் இல்லாமல் உபரி எனக் கண்டறிந்து இயக்குநரின் பொதுத் தொகுப்புக்கு ஒப்படைக்கப்படும் பணியிடங்களை எக்காரணத்தைக் கொண்டும் காலிப்பணியிடங்களாகக் கருதக் கூடாது.அதேபோல், கூடுதல் தேவையுள்ள பள்ளிகளின் பெயர்களையும் காலிப் பணியிடங்களாகக் கருதக் கூடாது என்று மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.மேலும், காலிப் பணியிட விவரங்களை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பும்போது தற்போதைய நிலவரப்படி அப்பள்ளிக்கு பூர்த்தி செய்ய ஏதுவாக நிரப்பத் தகுந்த காலியிடங்கள் என்பதையும், இப்பணியிடம் அப்பள்ளியில் ஐஎப்எச்ஆர்எம்ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும் உறுதி செய்த பின்னரே படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

# மின்மாற்றிகள் கொள்முதல் வழக்கு: செந்தில் பாலாஜி உள்ளிட்டோர் மீதான சிபிஐ விசாரணையை எதிர்த்த மனுக்கள் தள்ளுபடி

புதுடெல்லி:மே.13-

மின்மாற்றிகள் கொள்முதல் செய்யப்பட்டதில் அரசுக்கு ரூ. 397 கோடி வரை இழப்பு ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட விவகாரத்தில் எம்எல்ஏ செந்தில் பாலாஜி உள்ளிட்டோருக்கு எதிரான சிபிஐ விசாரணையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுக்களை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.தமிழகத்தில் கடந்த 202123 காலகட்டத்தில் சுமார் 45 ஆயிரம் மின் மாற்றிகளை கொள்முதல் செய்ததன் மூலம் அரசுக்கு ரூ. 397 கோடி வரை இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், எனவே இதற்கு காரணமான முன்னாள் மின் வாரிய அமைச்சரும், தற்



போதைய கோவை தெற்கு தொகுதி எம்எல்ஏவுமான செந்தில் பாலாஜி, டான்ஜெட்கோ முன்னாள் தலைவரான ராஜேஷ் லக்கானி, மின்வாரிய கொள்முதல் பிரிவு நிதி கட்டுப்பாட்டாளரான வி.காசி ஆகியோர் மீதான குற்றச்சாட்டு குறித்து லஞ்ச ஒழிப்புத்துறை முறையாக விசாரணை நடத்தவில்லை. எனவே இதுதொடர்பாக சிறப்பு புலனாய்வுக்குழு அல்லது சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன.அந்த வழக்குகளை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு, கடந்த ஏப்.29 அன்று சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிரான புகார்கள் மீது சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்த உத்தரவிட்டிருந்தனர்.சென்னை உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து மின் வாரிய முன்னாள் தலைவர் ராஜேஷ் லக்கானி, கொள்முதல் பிரிவு நிதி கட்டுப்பாட்டாளர் வி.காசி ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தனர்.இந்த மனுக்கள் மீதான விசாரணை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று நடந்தது.

அப்போது வி.காசி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சித்தார்த் தவே, ''இந்த விவகாரத்தில் சிபிஐ விசாரணை கோரப்படவில்லை.

இருப்பினும் சென்னை உயர் நீதிமன்றம் சிபிஐ விசாரிக்க உத்தரவிட்டுள்ளது. அரசியல் உள்நோக்கத்துடன் இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது'' என்றார்.இந்த வாதத்தை நிராகரித்த நீதிபதிகள், ''சிபிஐ விசாரணை வேண்டும் என கோரப்படாவிட்டாலும் தேவைப்படும் பட்சத்தில் சிபிஐ விசாரணைக்கு உயர் நீதிமன்றமே உத்தரவிட முடியும். இந்த விவகாரத்தில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. இருந்தபோதும் சிபிஐ சுதந்திரமான விசாரணையை மேற்கொள்ள வேண்டும்'' எனக்கூறி காசி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தனர்.அப்போது டான்ஜெட்கோ முன்னாள் தலைவர் ராஜேஷ் லக்கானி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் டி.எஸ்.நாயுடு, தங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை வாபஸ் பெற்றுக் கொள்வதாக தெரிவித்தார். அதையேற்ற நீதிபதிகள், அந்த மேல்முறையீட்டு மனுவையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# பொள்ளாச்சி அருகே கார் மீது லாரி மோதி தம்பதி உள்பட 4 பேர் உயிரிழப்பு

பொள்ளாச்சி:மே.13-

பொள்ளாச்சியை அடுத்த நெகமம் அருகே கார் மீது லாரி மோதியதில் கணவன், மனைவி உள்பட 4 பேர் உயிரிழந்தனர்.

சேலம் மாவட்டம், காடையம்பட்டியைச் சேர்ந்தவர் தனபால் (37). இவரும், மனைவி மேனகா (35), மகள் கனிஷ்கா (17), மகன் சுர்ஜித் (12) மற்றும் மேனகாவின் சகோதரரின் மகள் சினேகா (23) ஆகியோரும் வால்பாறைக்கு சுற்றுலா வந்துவிட்டு நேற்று மதியம் சொந்த ஊர் புறப்பட்டனர். பொள்ளாச்சியில் இருந்து பல்லடம் நோக்கி நேற்று மதியம் காரில் சென்று கொண்டிருந்தனர். நெகமம் அருகே வந்தபோது, எதிரே வந்த லாரி கட்டுப்பாட்டை இழந்து கார் மீது மோதியது. இதில் தனபால், மேனகா,



சினேகா ஆகியோர் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். காயத்துடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த கனிஷ்கா மற்றும் சுர்ஜித் ஆகியோரை அருகில் இருந்தவர்கள் மீட்டு, பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். ஆனால் வழியிலேயே கனிஷ்கா உயிரிழந்தார். காயமடைந்த சுர்ஜித் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தகவலறிந்து பொள்ளாச்சி துணை காவல் கண்காணிப்பாளர் நவீன் குமார் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார். உயிரிழந்தவர்களின் உடல்கள் உடற்கூராய்வுக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டன. நெகமம் போலீஸார் வழக்கு பதிந்து லாரி ஓட்டுநர் கிருஷ்ணகிரியைச் சேர்ந்த சரவணனை கைது செய்தனர்.

# 'தமிழக மீனவர் பிரச்சினையில் நடவடிக்கை தேவை' மத்திய அரசுக்கு முதல்வர் விஜய் கடிதம்

சென்னை:மே.13-

இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு, முதல்வர் விஜய் கடிதம் எழுதியுள்ளார். இது குறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில், 'ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியை சார்ந்த ஆறு மீனவர்கள் இன்று இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள நிகழ்வின்மீது தங்களது கவனத்தை ஈர்க்க விழைகிறேன்.ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியை சார்ந்த திருவாளர்கள் அலெக்ஸ்,



அந்தோணி ராஜன், சந்தான அலோசியஸ், அருள் தேபிரிட்டோ, ஆல்பர்ட் மற்றும் சகாய செல்வசானு ஆகிய ஆறு மீனவர்கள் 10.05.2026 அன்று நாட்டுப்படகில் மீன் பிடிக்க கடலுக்கு சென்றுள்ளனர். அவர்களை சர்வதேச எல்லையை கடந்ததாக தெரிவித்து இலங்கை கடற்படையினர் இன்று கைது செய்துள்ளனர். இலங்கை கடற்படையால் ஏற்கெனவே 54 மீனவர்கள் சிறை பிடிக்கப்பட்டு இலங்கை சிறையில் உள்ளனர். மேலும் 264 படகுகள் இலங்கை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் தங்கள் கவனத்துக்கு கொண்டுவர விழைகிறேன். எனவே, இப்பிரச்சினை குறித்து இலங்கை அதிகாரிகளை தொடர்புகொண்டு உரியதூதரக நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் படகுகளை உடனடியாக மீட்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்' என்றுஅவர் தனது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.



## "உதயநிதி இன்னும் திருந்தவில்லை"

# சனாதனம் குறித்த பேச்சுக்கு வானதி சீனிவாசன் கண்டனம்

சென்னை:மே.13-

ஆட்சியில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட பிறகும் உதயநிதி ஸ்டாலின் திருந்தவில்லை என்றும், அவரை மக்கள் திருத்தும் காலம் விரைவில் வரும் என்றும் பாஜக மகளிர் அணியின் தேசிய தலைவர் வானதி சீனிவாசன் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக சட்டமன்றத்தில் இன்று புதிய சபாநாயகராக தேர்வு செய்யப்பட்ட ஜே.சி.டி.பிரபாகரை வாழ்த்தி பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், மக்களைப் பிரிக்கும் சனாதனம், அதாவது இந்து மதம் ஒழிக்கப்பட வேண்டும் என பேசியுள்ளார்.

சனாதன தர்மம் அதாவது இந்து மதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பது உதயநிதி ஸ்டாலினின், திமுகவின் கொள்கை என்றால், அதை திமுக தேர்தல் அறிக்கையில் ஏன் குறிப்பிடவில்லை? தேர்தல் பிரசாரத்தில் சனாதன தர்மத்தை, இந்து மதத்தை ஒழிக்க வேண்டும் என உதயநிதி ஸ்டாலின் ஏன் பேசவில்லை?

தேர்தல் பிரசாரத்தின் நிறைவு நாளில், "நாங்கள் இந்துக்களுக்கு விரோதி அல்ல" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பேசினார். ஆட்சியின் இறுதி மூச்சு வரை இந்து தர்மத்தை பழிப்பதை திமுக வழக்கமாகக் கொண்டிருந்தது. அதனால்தான், கடைசி நாளில், "நாங்கள் இந்துக்களுக்கு விரோதி அல்ல" என ஸ்டாலின் சொன்னதை மக்கள் நம்பவில்லை.


முதல்வர் விஜய் தலைமையில் தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைத்துள்ளதால், சிறுபான்மையினரின் வாக்குகள் இனி திமுகவுக்கு கிடைக்காது என பேசப்பட்டு வருகிறது. சிறுபான்மையினர் ஓட்டுகள் இல்லை என்றால் திமுக என்பது ஜீரோதான்.

அதனால்தான், "நாங்கள் எப்போதும் இந்து விரோதிதான்" என்பதை, எதிர்க்கட்சித் தலைவரானதும் முதல் உரையிலேயே உதயநிதி பேசியுள்ளார். தமிழக மக்கள் இந்த வேடதாரிகளை புரிந்து கொண்டுதான், ஆட்சியிலிருந்து விரட்டியடித்துள்ளனர். அப்படியும் இவர்கள் திருந்தவில்லை. அதனால் மக்கள் திருத்துவார்கள். அதற்கான காலம் விரைவில் வரும்'' என தெரிவித்துள்ளார்.

# திருவள்ளூர் - அதிமுக கிளை செயலருக்கு அரிவாள் வெட்டு: 3 இளைஞர்கள் கைது

திருவள்ளூர்: மே.13-

திருவள்ளூர், கொண்டமாபுரம் தெருவைச் சேர்ந்தவர் ஆரோன்பாஷா (52). அதிமுக கிளை செயலாளரான இவர் திருவள்ளூர் அருகே உள்ள ஈக்காடு பகுதியில் பழைய கதவுகள், ஜன்னல் போன்ற பொருட்களை விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறார்.இந்நிலையில், ஆரோன் பாஷா நேற்று முன் தினம் பகலில் ஈக்காடு பகுதியில் உள்ள கடையில் இருந்தபோது, அவரை மொபைல் போனில் அழைத்த மர்ம நபர், `பழைய பொருட்கள் வேண்டும்' என, தெரிவித்துள்ளார்.தொடர்ந்து, கடைக்கு வந்த மர்ம நபர்கள், பொருட்



களை பார்ப்பது போல் ஆரோன்பாஷாவை கடைக்குள் அழைத்துச் சென்று, பொருட்களின் விலை குறித்து விசாரித்ததாக கூறப்படுகிறது.அப்போது, மர்ம நபர்கள் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து, ஆரோன்பாஷாவை வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பியோடினர். ஆரோன் பாஷா ராமாபுரம் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.வீடுகளை இடித்து அதிலிருந்து ஜன்னல், கதவுகள் போன்ற பொருட்களை எடுத்து விற்பனை செய்வதில் ஆரோன் பாஷாவுக்கும் திருவள்ளூரை அடுத்த தண்ணீர் குளம் பகுதியை சேர்ந்த அரவிந்தன் என்பவருக்கும் இடையே தொழில் போட்டி இருந்து வந்ததும், அதன் காரணமாக ஆரோன்பாஷா அரிவாளால் வெட்டப்பட்டதும் புல்லரம்பாக்கம் போலீஸார் விசாரணையில் தெரிய வந்தது.

இதையடுத்து, ஆரோன் பாஷாவை அரிவாளால் வெட்டியது தொடர்பாக தண்ணீர்குளம் பகுதியைச் சேர்ந்த அரவிந்தன் (26), விஜய் (30), சூரிய பிரகாஷ் (24) ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

# பழனி அரசு மருத்துவமனை தற்காலிக பணியாளர்களை பணி நீக்கம் செய்ய ஐகோர்ட் தடை

மதுரை:மே.13-

பழனி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை தற்காலிக பணியாளர்கள் 25 பேரை பணி நீக்கம் செய்ய தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பழனியை சேர்ந்த எம்.நாச்சிமுத்து, ம.மரகதம் உள்ளிட்ட 25 பேர் தாக்கல் செய்த மனுவில், 'நாங்கள் பழனியில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் பல ஆண்டுகளாக தற்காலிக தூய்மை பணியாளர், செவிலியர் உதவியாளராக பணிபுரிந்து வருகிறோம்.இந்நிலையில் மருத்துவமனையில் ஒப்பந்த பணியாளர்களை நியமிக்கும் ஒப்பந்தம் புதிய நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் எங்களுக்கு பணி வழங்க மறுக்கிறது.



எங்களை வெளியேற்றி விட்டு புதிதாக ஆட்களை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதுகுறித்து கேட்டதற்கு நாங்கள் குறைந்தபட்ச ஊதியம், வார விடுமுறை உள்ளிட்ட சலுகைகளை வழங்கக்கோரிய வழக்கு தாக்கல் செய்திருப்பதால் வேலை வாழங்க முடியாது என்கின்றனர். எனவே எங்கள் 25 பேரையும் பழனி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் தற்காலிக பணியாளர்களாக பணிபுரிய அனுமதிக்க உத்தரவிட வேண்டும்' என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.இந்த மனுவை நீதிபதி வேல்முருகன் இன்று விசாரித்தார். மனுதாரர்கள் சார்பில் வழக்கறிஞர்கள் திருமுருகன் வாதிட்டார். பின்னர் நீதிபதி பிறப்பித்த உத்தரவில், 'பழனி அரசு தலைமை மருத்துவமனையில் தற்காலிக தூய்மைப் பணியாளர், செவிலியர் உதவியாளர்களாக பணிபுரிந்து வரும் மனுதாரர்கள் 25 பேரையும் மறு உத்தரவு வரும் வரை பணியிலிருந்து நீக்கக் கூடாது.மனு தொடர்பாக சுகாதாரத் துறை செயலாளர், மருத்துவம் மற்றும் கிராமப்புற சுகாதாரப் பணிகள் இயக்குனர் பதிலளிக்க வேண்டும். விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது' கூறியுள்ளார்.

# தங்கம் விலை அதிரடியாக பவுனுக்கு ரூ.1,840 உயர்வு

சென்னை.மே.13-

சென்னையில் ஆபரணத் தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,840 உயர்ந்துள்ளது. அதேபோல் வெள்ளியின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது.சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை முதலீடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

அந்தவகையில், தங்கம் விலை கடந்த சில நாட்களாகவே ஏற்ற இறக்கத்துடன் இருந்து வருகிறது. சென்னையில் நேற்று தங்கம் கிராமுக்கு ரூ.50 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,100க்கும், பவுனுக்கு ரூ.400 குறைந்து ஒரு பவுன் ரூ.1,12,800க்கு



விற்பனையானது.

இந்நிலையில் தங்கம் விலை இன்று அதிரடியாக உயர்ந்து உள்ளது. அதன்படி, சென்னையில் இன்று 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.230 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,330க்கும், பவுனுக்கு ரூ.1840 உயர்ந்து ஒரு பவுன் ரூ.1,14,640க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலை நிலவரம்: சென்னையில் வெள்ளி இன்று கிராமுக்கு ரூ.15 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.300க்கு விற்பனையாகிறது. கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.3,00,000க்கு விற்பனை செய்யப்படுகிறது.

அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 95.49 ஆக கடும் வீழ்ச்சி கண்டுள்ளது. ஈரான் அமெரிக்கா மோதல் பதற்றம் மீண்டும் வலுத்துள்ளதால் பங்குச் சந்தைகளும் வீழ்ச்சி கண்டு வருகின்றன. இந்தப் பின்னணியில், சர்வதேச அளவில் தங்கம் மீதான முதலீடு அதிகரித்ததால் ஆபரணத் தங்கம் விலையும் கூடியுள்ளது.

# போக்குவரத்து நெரிசலில் சிக்கித் தவிக்கும் ராமேசுவரம் தீவு!

ராமேசுவரம்:.மே.13-

ராமேசுவரம் தீவில் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பக்தர்களும், சுற்றுலாப் பயணிகள் அவதிக்குள்ளாகுகின்றனர். ராமேசுவரத்திற்கு ஆன்மிகப் பயணமாகவும், இங்குள்ள பாமபன் பாலம், தனுஷ்கோடி கடற்கரை உள்ளிட்ட பல்வேறு இடங்களை காண்பதற்காகவும் நாளுக்கு நாள் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.குறிப்பாக மாதந்தோறும் அமாவாசை தினங்கள், வார இறுதி நாட்கள், அரசு விடுமுறை நாட்கள், பள்ளி விடுமுறை நாட்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை பல மடங்கு



அதிகரித்து விடுவதால் ராமேசுவரம், பாம்பன் பாலம், தனுஷ்கோடி, அரிச்சல் முனை, கோதண்டர் ராமர் கோயில், அக்னி தீர்த்தக் கடற்கரை, சீதா தீர்த்தம், கலாம் நினைவிடம், திட்டக்குடி சந்திப்பு ஆகிய பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் அதிக நேரம் ஏற்படுகிறது.

மேலும், ராமேசுவரத்தில் சராசரி நாட்களில் தினந்தோறும் காலை மற்றும் மாலை நேரங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகளவில் ஏற்படுகிறது. ராமேசுவரம் வர வேண்டும் என்றால் பாம்பன் சாலை பாலம் வழியாக வாகனங்களிலே அல்லது ரயிலில் பாம்பன் ரயில் பாலம் மூலம் மட்டுமே வர முடியும்.ராமேசுவரம் கோயிலுக்கு நேரடியாக வாகனங்களில் செல்ல முடியாதவாறு நான்கு ரத வீதிகளில் வாகனங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதிகளுக்கு செல்ல விரும்புபவர்கள் இரண்டிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவுக்கு மேல் கூடுதலாக சுற்றிச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. அது போல ராமேசுவரத்தில் குறுகிய அளவே அகலமுள்ள பல சாலைகளில் இருபுறங்களில் இருந்தும் வாகனங்களை இயக்குவதால் அடிக்கடி விபத்து ஏற்பட்டு விடுகிறது.போக்குவரத்து நெரிசல் இல்லாமல் வாகன ஓட்டிகள் சாலைகளில் பாதுகாப்பான முறையில் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும், என்பதே வாகன ஓட்டிகளின் விருப்பமாக உள்ளது.இது குறித்து ராமேசுவரம் நகராட்சியினர் கூறும்போது, ''ராமேசுவரத்தில் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்காக நகர் பகுதிக்குள்ளேயே வாகனங்கள் வராமல் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள கலாம் நினைவிடம் அருகிலிருந்து தீர்த்தக் கடற்கரை, கோயில் மற்றும் பார்க்கிங் உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்வதற்கு 6.5 கி.மீ தூரம் தூரத்திற்கு சுற்றுச்சாலை அமைக்கப்பட்டு வருகிறது. இந்த சுற்றுப்பாதை தயார் ஆனதும் போக்குவரத்து நெரிசல் பெருமளவில் குறையும்'' என்று அவர்கள் தெரிவித்தனர்.

# விஜய் முதல்வராக வேண்டி 16 அடி வேல் குத்திய தீவிர பக்தன் தீக்குளிப்பு! சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

நெல்லை மே.13-
திருநெல்வேலி மாவட்டம் செட்டிகுளம் அருகே உள்ள புதுமை கிராமத்தைச் சேர்ந்த தவெக கிளைச் செயலாளர் இசக்கியப்பன் (47), சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். தனது கட்சித் தலைவர் விஜய் முதல்வராக வேண்டும் என்பதற்காகச் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு 16 அடி நீள வேலை உடலில் குத்தி நேர்த்திக்கடன் செலுத்தியவர்



இசக்கியப்பன். இந்நிலையில், கடந்த சில நாட்களாக விஜய் முதல்வராகப் பதவியேற்பதில் நிலவிய தாமதத்தால் மனமுடைந்த அவர், தன் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீக்குளித்தார். பலத்த காயமடைந்த நிலையில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர், சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். இச்சம்பவம் தவெக தொண்டர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சார்பில் போதைப்பொருள் இல்லா தமிழ்நாடு என்ற திட்டத்தின் கீழ், போதைப்பொருட்கள் ஒழிப்பு தொடர்பான மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.மயில்வாகனன், இ.கா.ப., அமாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.




# புதுச்சேரி மீன்வளத்துறை சார்பில், 2024-25 நிதியாண்டிற்கான மீனவ இளைஞர்களுக்கான வெளிமாநிலக் கல்விச் சுற்றுலா

புதுச்சேரி.மே.13-
புதுச்சேரி மீன்வளத்துறை சார்பில், 2024-25 நிதியாண்டிற்கான மீனவ இளைஞர்களுக்கான வெளிமாநிலக் கல்விச் சுற்றுலாவை மீன்வளத்துறை இயக்குனர் திரு. அ.முகமது இஸ்மாயில் இன்று காலை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
இந்தத் திட்டத்தின் கீழ், புதுச்சேரியைச் சேர்ந்த சுமார் 27 மீனவ இளைஞர்கள், மே 11 முதல் மே 16 வரை ஆந்திர மாநிலத்திற்குச் சுற்றுலா செல்கின்றனர். அங்குள்ள நவீன மீன்பிடித் தொழில்நுட்பங்கள், பதப்படுத்தும் முறைகள் மற்றும் சந்தைப்படுத்தும் உத்திகளை அவர்கள் நேரில் கண்டு கற்க உள்ளனர். மீன்வளத்துறை இணை இயக்குனர் முனைவர் ப. கோவிந்தசாமி தலைமையில் இந்தப் பயணம் நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை மீனவர் நலப் பிரிவு ஊழியர்கள் செய்துள்ளனர்.




# திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டம் மூஞ்சிக்கள் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோவில் திருவிழா

திண்டுக்கல்.மே.13-
திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டம் மூஞ்சிக்கள் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோவில் திருவிழாவானது, கடந்த பதினைந்து தினங்களாக வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது. விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக 1008 பால்குட ஊர்வலமானது, கொடைக்கானல் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள பக்தர்கள், டிப்போ பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு காளியம்மன் திருக்கோவிலில் ஒன்று சேர்ந்து எரிச்சாலை, ஏழு ரோடு, அண்ணா சாலை மூஞ்சிகள் வழியாக அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலை சென்றடைந்து, அங்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்படும். ஏராளமான பெண்கள் பால் குடங்களை சுமந்து அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் மேற்கொண்டு தங்களது நேர்த்திகடனை செலுத்தி அம்மனை தரிசித்தனர். திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



■ புதுச்சேரிக்கு வருகை தந்த பாஜக பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானாவை விமான நிலையத்தில் அமைச்சர் நமச்சிவாய மாநிலத் தலைவர் ராமலிங்கம் முன்னாள் சபாநாயகர் செல்வம் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ள மீனாட்சி சுந்தரம் ஆகியோர் வரவேற்றனர்.

# மாணவர்களின் பாதுகாப்பே முக்கியம்: பல்லடத்தில் 1,412 பள்ளி வாகனங்களை நேரில் ஆய்வு செய்தார் மாவட்ட ஆட்சியர்

திருப்பூர் மே 13-
தமிழகத்தில் கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்பட உள்ள நிலையில், மாணவர்களின் பாதுகாப்புப் பயணத்தை உறுதி செய்யும் வகையில் திருப்பூர் மாவட்ட நிர்வாகம் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.*பல்லடத்தில் மெகா ஆய்வு:*திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள மாதப்பூரில், மாவட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் சார்பில் பள்ளி வாகனங்களுக்கான வருடாந்திர ஆய்வு முகாம் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே நேரில் கலந்துகொண்டு வாகனங்களைப் பார்வையிட்டார். ஆய்வுக்கு




உட்பட்ட வாகனங்கள்: திருப்பூர் வடக்கு, தெற்கு, காங்கேயம், பல்லடம் மற்றும் அவிநாசி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 232 பள்ளிகளைச் சேர்ந்த 1,412 பள்ளி பேருந்துகள் மற்றும் வேன்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.*பாதுகாப்பு சோதனைகள்:* வாகனங்களுக்குள் நேரில் சென்ற ஆட்சியர், அவசர கால கதவுகள், முதலுதவி பெட்டிகள், தீயணைப்பு கருவிகள், வேகக் கட்டுப்பாட்டு கருவிகள், படிக்கட்டுகளின் உயரம், ஜன்னல் கம்பிகள் மற்றும் டயர்களின் தரம் ஆகியவை விதிகளின்படி உள்ளனவா என ஆய்வு செய்தார்.*நடவடிக்கை:* சோதனையில் சிறிய குறைபாடுகள் கண்டறியப்பட்ட 10 வாகனங்களுக்குத் தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டது. அக்குறைபாடுகளைச் சரிசெய்து மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்திய பின்னரே அவற்றுக்கு அனுமதி வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.*ஓட்டுநர்களுக்கு ஆட்சியரின் அறிவுரை:*ஆய்வுக்குப் பிறகு ஓட்டுநர்களிடையே பேசிய ஆட்சியர், "மாணவர்களின் உயிர் உங்கள் கைகளில் உள்ளது. எனவே, ஓட்டுநர்கள் அனைவரும் முறையாகக் கண் பரிசோதனை செய்துகொள்வதோடு, உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதிலும் கவனம் செலுத்த வேண்டும்" என்று வலியுறுத் தினார்.இந் நிகழ் வில் வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலர் (பொறுப்பு) பாஸ்கர், தெற்கு வட்டார அலுவலர் ப.பழனியப்பன் மற்றும் உதவி வட்டார அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




■ சேலம் மல்லூஓர் பேரூராட்சிக்கு உட்பட்ட தென்திருஅண்ணாமலை திருக்கோவில் மற்றும் தனியார் பள்ளிகள் இணைந்து, மாரத்தான்2026 வருடத்திற்கான மரம் வளர்ப்போம் மதுவை தவிர்போம் என்ற வாசகத்துடன் மாரத்தான் போட்டி நடைபெற்றது. 6 வயது முதல் 16 வயதிற்கு மேற்பட்டவர்கள் வரை ஒரு கிலோ மீட்டர் முதல் 5 கிலோ மீட்டர் வரை அத்தனூர் அம்மன் கோவிலிருந்து தொடங்கி தென்திரு அண்ணாமலையார் கோவில் வரை போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் 670 போட்டியாளர்கள் பங்கேற்றனர். இதில் வெண்ணந்தூர் காவல் ஆய்வாளர் சிவக்குமார் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இந்த போட்டிக்கான ஏற்பாடுகளை தென்திரு அண்ணாமலையார் திருக்கோவில் சிவதொண்டர்ராஜா ஆதவன் செய்திருந்தார்.



■ மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார், கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம்,மருதங்குடி கிராமத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் மருதங்குடி முதல் வையம்பட்டி கிராமம் வரை 2.4 கிலோ மீட்டர் நீளத்தில் ரூபாய் 1.45 கோடி மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டு வரும் தார் சாலை பணியினை ஆய்வு செய்து பார்வையிட்டார்



■ மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், ஓடைப்பட்டி கிராமத்தில்பொதுமக்களுக்கு வழங்கப்படும் தண்ணீர் தரம் குறித்து ஆய்வு செய்து பார்வையிட்டார். கட்டாய குளோரினேஷன் மற்றும் மேல்நிலை தொட்டிகளை அவ்வப்போது சுத்தம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

# சத்தீஸ்கர் மாநிலத்தில் அதிர்ச்சி தர்பூசணி சாப்பிட்ட சிறுவன் பலி

சத்தீஸ்கர்:.மே.13-
ஜாஞ்ச்கிர்சம்பா (Janj-gir-Champa) மாவட்டத்தில் தர்பூசணி பழம் சாப்பிட்ட 15 வயது சிறுவன் அகிலேஷ் திவார் உயிரிழந்தார். குர்கோட் கிராமத்தில் உள்ள தனது உறவினர் வீட்டிற்கு வந்திருந்த அகிலேஷ் மற்றும் சில குழந்தைகள் மாலை நேரத்தில் தர்பூசணி சாப்பிட்டுள்ளனர். பழத்தை சாப்பிட்ட அகிலேஷிற்கு வயிற்றுப்போக்கு மற்றும் மூச்சு திணறல் ஏற்பட்டதால் மருத்துவமனைக்கு



கொண்டு சென்றனர். ஆனால் சிறுவன் அகிலேஷ் மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே உயிரிழந்தார். அகிலேஷுடன் சேர்ந்து தர்பூசணி சாப்பிட்ட பிற குழந்தைகள் உடல்நலம் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். மேலும் காலையில் வெட்டி வைத்த பழத்தை பல மணி நேரம் கழித்து மாலையில் சாப்பிட்டதால் உணவு நஞ்சாகியிருக்கலாம் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த சிறுவனின்உடல் பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. வீட்டில் இருந்த மற்றொரு தர்பூசணிபழம் ஆய்வுக்காக உணவுப் பாதுகாப்புத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது




# புதிய முதல்வராக பதவியேற்றுள்ள விஜய்க்கு இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் வாழ்த்து

ராமேசுவரம்: மே.13-
தமிழகத்தின் புதிய முதல்வராக பதவியேற்றுள்ள ஜோசப் விஜய்க்கு இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வாழ்த்து தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தி: தமிழகத்தின் புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ள முதல்வர் விஜய்க்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். சமூக நீதி மற்றும் மதச்சார்பின்மையை அடித்தளமாகக் கொண்ட ஒரு புதிய யுகத்தைப் பற்றி பேசினீர்கள். வெறுப்பு மற்றும் பழைய காயங்களின் மீது கட்டப்பட்ட சமூகங்கள் இறுதியில் தனித்து விடப்படும் என்பதையும், அதே நேரத்தில் நீதி மற்றும் சகவாழ்வின் மீது கட்டப்பட்ட சமூகங்களே மக்கள் உண்மையாக வாழ விரும்பும் எதிர்காலத்தை உருவாக்கும் என்பதையும் வரலாறு நமக்குக் காட்டியுள்ளது.
உலகம் ஏற்கெனவே பிரிவினைகளால் நிறைந்துள்ளது. நமது பிராந்தியத்தில் உள்ள மக்கள் அனைவரும் மொழி, மதம் அல்லது அடையாளம் கடந்து உண்மையாக எதிர்பார்ப்பது சமூக முன்னேற்றம், நீதி மற்றும் நிலையான தன்மையே ஆகும்.
நம்மைப் பிரிக்கும் விஷயங்களைவிட, நம்மிடையே உள்ள பொதுவான பண்புகளும் ஒற்றுமைகளும் மிக அதிகம். உங்களின் இந்தப் புதிய அத்தியாயம் முன்னேற்றத்தையும், கருணையையும், கடந்த காலத்தில் மற்றவர்கள் இடைவெளியை உருவாக்கிய இடங்களில் புரிதலையும் ஏற்படுத்துவதற்கான ஆற்றலை கொண்டு வருமென எதிர்பார்க்கிறேன். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இமாச்சலப் பிரதேசத்தில் ஏற்பட்ட பெரும் நிலச்சரிவால் பதற்றம்

இமாச்சலப் பிரதேசம்:மே.13-
கின்னூர் மாவட்டத்திலுள்ள பாவ்நகர் (Bhabanagar) சந்தைக்கு அருகில் உள்ள தேசிய நெடுஞ்சாலை 5 (NH 5) பகுதியில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. மலையிலிருந்து பாறைகளும் மற்றும் இடிபாடுகளும் சரிந்து நெடுஞ்சாலையில் விழுந்தது. அந்த சமயத்தில் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் அப்பகுதியில் இருந்ததால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.சம்பவ இடத்திற்கு அருகிலுள்ள தனியார் நிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த



அகழ்வாராய்ச்சிப் பணிகளே இந்த நிலச்சரிவு ஏற்பட காரணமாக இருந்திருக்கலாம் என்று முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும், இந்தச் சம்பவத்திற்கான சரியான காரணத்தை அதிகாரிகள் இன்னும் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தவில்லை.இந்த நிலச்சரிவில் சிக்கி யாரும் உயிரிழக்கவில்லை என தகவல் தெரிவித்தனர். மேலும், நிலச்சரிவு காரணமாக நெடுஞ்சாலையில் போக்குவரத்து தற்காலிகமாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000